EVERWIN PUBLIC SCHOOL

STD: VIII TAMIL – L2 Term - I

இயல் - 1

| | | |
|---|---|---|
| கவிதைப்பேழை | : | 1. தமிழ்மொழி வாழ்த்து<br>2. தமிழ்மொழி மரபு |
| உரைநடை உலகம் | : | தமிழ்வரி வடிவ வளர்ச்சி |
| வரிவானம் | : | சொற்பூங்கா |
| கற்கண்டு | : | எழுத்துகளின் பிறப்பு |

## கவிதைப் பேழை: 1. தமிழ்மொழி வாழ்த்து

### I. சிறுவினா:

1. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக:

 * தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று விளங்கும் மொழி.

 * ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான மொழி.

 * ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும தன் இலக்கிய மணத்தை பரவச் செய்து புகழ்கொண்ட மொழி.

 * உலகம் உள்ள வரையில் எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருளை நீங்கி மேன்மையுற்று சிறப்படைந்த மொழி.

 * பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கி ஒளிரச் செய்த மொழி.

 * வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் மொழி என தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறியுள்ளார்.

### II. சிந்தனை வினா:

1. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

 * தமிழ்மொழி வளமையான மொழி ஆகும்.

 * எக்காலத்துக்கும் நிலைபெற்று விளங்கும் மொழி ஆகும்.

 * எல்லா இடங்களிலும் இலக்கிய மணத்தை பரவச் செய்யும் மொழி ஆகும்.

 * மக்களின் அறியாமையை நீக்குகின்ற மொழி ஆகும்.

 * உலகமும், தமிழ் மக்களும் இருக்கும வரைதமிழ்மொழி அழியாமல் வண்மையுடன் இருக்கும்.எனவே பாரதியார் தமிழை வண்மை மொழி என்று கூறுகிறார்.

## கவிதைப் பேழை: 2. தமிழ்மொழி மரபு

### I. சிறுவினா:

1. தமிழ்மொழியின் மரபு குறித்து தொல்காப்பியர் கூறியுள்ளக் கருத்துகளை எழுதுக.

 *இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும்.

 *இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் ஐம்பூதங்களால் உருவானவை ஆகும்.

 * உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும், ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு.

 * திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும்.

 * தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் மரபு மாறினால் பொருள் மாறிவிடும் என்று தொல்காப்பியர் தமிழ்மொழியின் மரபு குறித்துக் கூறியுள்ளார்.

### II. சிந்தனை வினா:

1. நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

 * மரபு என்பது நமக்கு முன்னோர்களிடம் இருந்து கிடைத்த சொத்து.

 * "மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்" என்னும் வரி மரபுநிலை திரிந்தால் ஏற்படும் பாதிப்பினை எடுத்து உரைக்கின்றது. எனவே நம் முன்னோர்கள் மரபுநிலையைப் பின்பற்றினர்.

 * இந்த மரபு எந்தவித மாற்றங்களும் இன்றி ஒரு தலைமுறை இடம் இருந்து அடுத்த தலைமுறையினருக்கு கொடுக்கப்படுகிறது.

 * இது நம்முடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும் அழிந்துவிடாமல் பாதுகாக்கிறது.

 * காலம் எவ்வளவு வேகமாக மாறினாலும் தங்கள் பண்பாட்டு பழக்க வழக்கங்களையும் பின்பற்ற மறப்பதில்லை.

## உரைநடை உலகம்: தமிழ் வரிவடிவ வளர்ச்சி

### I. சிறுவினாக்கள்:

1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

 * ஓலைச் சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது சிதைந்து விடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

* ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும், பத்தி பிரித்தலும் கிடையாது.

* புள்ளி இடப்பட்டு எழுதப்படும் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவை மெய்யா, உயிர்மெய்யா, குறிலா, நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது. படிப்பவர்கள் பெரிதும் துன்புற்றதால் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

* நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகின்றது.

* ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுகிறது.

* ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு பின் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுகிறது.

* குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் இல்லை.

* இவ்வாறு தமிழ் எழுத்துகளில் உருவமாற்றங்ஏற்படுத்தப்பட்டன.

3. பெரியார் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தத்தை எழுதுக.

* இருபதாம் நூற்றாண்டுவரை ணா, றா, னா, ஆகிய எழுத்துகளை ணா, றா, னா, என எழுதினர்.

* ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை ணை, லை, ளை, என எழுதினர்.

* அச்சுக் கோப்பதற்காக இவ்வெழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது.

* இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டார்.

| | | |
|---|---|---|
| சான்று: அண்ணா | - | அண்ணா |
| தலை | - | தலை |
| சிறார் | - | சிறார் |

## II. நெடுவினா:

1. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக:

### பேச்சுமொழி:

* மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்த சைகைகளைப் பயன்படுத்தினார்கள். காலப்போக்கில் குரலைப் பயன்படுத்தி ஒலிகள் மூலம் தனது கருத்துகளை வெளிப்படுத்தினான். அவை பண்பட்டுப் பேச்சுமொழி உருவானது.

### எழுத்துகளின் தோற்றம்.

* மனிதன் தனக்குப்பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

### தமிழ் எழுத்துகள்:

* காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வளர்ச்சி அடைந்து வந்துள்ளன.

* அச்சக்கலை தோன்றியப் பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

* தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களில் கருங்கல், சுவர்கள், செப்பேடுகள் போன்றவற்றில் காணலாம்.

### வரிவடிவ வளர்ச்சி:

* அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன.

* பாறைகளில் செதுக்கும் போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது. அதனால் நேர்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.

* எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. அவையே நிலையான வடிவங்களாக மாறிவிட்டன.

### உருவ மாற்றம்:

* நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகின்றது.

* ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இணைக்கொம்பு (ை) பயன்படுகின்றது.

* குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் இல்லை.

### எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொணடவர்கள்:

* வீரமாமுனிவர் எகர ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை நீக்கினார்.

* ண, ற, ன என்னும் எழுத்துகளை அச்சிடுவதற்கு கடினமாக இருந்ததால் ணா, றா, னா என எழுதும் திருத்தம் கொண்டு வந்தவர் பெரியார்.

### III. சிந்தனை வினா:

1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டியப் பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

* பரிசு அளிக்கும்போது நல்ல தமிழ்ப்புத்தகங்களை அளித்தல்.

* விழாக்களுக்கு அடிக்கும் அழைப்பிதழில் தமிழில் மட்டுமே அச்சிடுதல்.

* தொலைபேசியில் பேசும்போது முதலில் ஹலோ என்பதை விட்டுவிட்டு வணக்கம் என்று சொல்லி ஆரம்பித்தல்.

* மகிழுந்துகளில் செல்லக் குழந்தைகளின் பெயரை எழுத விருப்பப்பட்டால் தமிழில் மட்டும் எழுதுதல்.

* தமிழ்நாட்டில் குழந்தைகளை தமிழில் படிக்க வைக்க விரும்பம் இல்லை என்றால் குறைந்தப்பட்சம் மொழிப்பாடம் தேர்வு செய்யும் போது தமிழ் மொழிப்பாடத்தை தேர்வு செய்தல் வேண்டும்.

2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து எழுதுக.

* உரோம எழுத்துகள் இன்று உலகில் அதிகமாக பயன்படுத்ததப்படும் நெடுங்கணக்கு எழுத்து முறை ஆகும்.

* இது பண்டைய உரோமர்களால் பயன்படுத்தப்பட்டது.

* வேற்றுமொழி சொற்கள் இல்லாமல் எழுதுதல் தனித்தமிழ். ஆனால் அப்படிப்பட்ட தனித்தமிழ் எப்பொழுதும் எங்கும் இருந்தது இல்லை. தமிழால் வேற்றுமொழி கலப்பு இல்லாமல் தனித்து இயங்க முடியும். மாணவர்களிடம் தமிழின் மீதுள்ள ஆர்வத்தைக் குறைத்து வேற்றுமொழியின் மீது ஆர்வத்தைத் தூண்டுகிறோம்.

## விரிவானம் - சொற்பூங்கா

### முன்னுரை:

மொழி வளரும் தன்மை உடையது. புதிதாக இலக்கியங்கள் தோன்றுவது போலவே புதிய சொற்களும் தோன்றுகின்றன. ஒரு வேர்ச்சொல்லில் இருந்து பல சொற்கள் கிளைத்துப் பெருகுவது மொழி வளர்ச்சியின் அடையாளம் ஆகும்.

### சொல் தோன்றிய காலம்:

கல்லின் தேய்மானம் போலச் சொல்லுக்கும் தேய்மானம் உண்டு. கல் தோன்றிய காலம், உயிரோட்ட இயக்கம் இவற்றைப் போலச் சொல் தோன்றிய காலம், இயக்கம் ஆகியவற்றால் சொல்லும் தேய்தல் இயற்கையானது, "சொல்" என்பதற்கு நெல் என்பது ஒரு பொருள். நெல்லில் பதர் உண்டு. ஆனால் சொல்லில் பதர் இருத்தலாகாது.

### எழுத்து மொழியின் வகை:

மொழி என்றால் சொல் என்று பொருள். மொழி: * ஓர் எழுத்து மொழி * ஈரெழுத்து மொழி * இரண்டுக்குமேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகைப்படும். குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை. நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார்; நொ,து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார் நன்னூலார்.

### வார்த்தைகளின் துவக்கம்:

"மா" என்பது பெரிய என்று பொருள்.

* பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை "மாநாடு" என்று அழைத்தனர்.

* பல குறுநிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை "மாநிலம்" என்று அழைத்தனர்.

* உலகப் பெரும் பரப்பை மாஞாலம் என்று அழைத்தனர். "ஆன்" என்பது "ஆ" ஆகியது: "மான்" என்பது "மா" ஆகியது; "கோன்" என்பது "கோ" ஆகியது; "தேன்" என்பது "தே" ஆகியது; பேய் என்பது "பே"ஆகியது. கால வெள்ளத்தில் கரைந்து தேய்ந்தது.

"ஏ" என்றால் "ஏவும் அம்பு" என்று பொருள். அம்பைப்போல் விரைவாய் செயல்பட்டவன் "ஏவலன்" என்றும். அம்பு விடும் கலையை "ஏகலை" என்றும், அதில் வல்லவனை 'ஏகலைவன்' என்றும் பாராட்டினர்.

### முடிவுரை:

கால வெள்ளத்தில் கரைந்தும், வளர்ந்து நிற்கும் நம் தமிழ் மொழியை மொழிப்பற்றுள்ள ஒருவனே வளர்ப்பான்; அதன் இனத்தை, பண்பாட்டைக் காப்பான்.

## கற்கண்டு - எழுத்துகளின் பிறப்பு

### I. சிறுவினாக்கள்:

1. எழுத்துகளின் பிறப்பினை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

எழுத்துகளின் பிறப்பினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம. அவை, இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு ஆகும்.

2. ழகர, லகர, ளகர மெய்களின் பிறப்பு முயற்சி பற்றி எழுதுக.

* 'ழ' கரம் - மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.

* 'ல' கரம் - மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கின்றன.

* 'ள' கரம் - மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

3. இதழ்களைக்குவிப்பதால் பிறக்கின்ற எழுத்துகள் என்னென்ன?

இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்ற எழுத்துகள் உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகும்.

4. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

* வல்லின மெய் எழுத்துகள் (க, ச, ட, த, ப, ற) ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

* மெல்லின மெய் எழுத்துகள் (ங, ஞ, ண, ந, ம,ன) ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

* இடையின மெய் எழுத்துகள் (ய, ர, ல, வ, ழ, ள) ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

## இயல் - 2

| | | |
|---|---|---|
| கவிதைப்பேழை | : | 1. ஓடை<br>2. கோணக் காத்துப் பாட்டு |
| உரைநடை உலகம் | : | நிலம் பொது |
| வரிவானம் | : | வெட்டுக்கிளியும் சருகுமானும் |
| கற்கண்டு | : | வினைமுற்று |
| வாழ்வியல் | : | திருக்குறள் |

### கவிதைப் பேழை: 1. ஓடை

**I. சிறுவினாக்கள்:**

1. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

* நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது. விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது.

* குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது.

* நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது என ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுகின்றார்.

**I. சிந்தனை வினா:**

1. வள்ளைப்பாட்டு என்பது நெல்குத்தும் போது பாடப்படும் பாடலாகும். இது போல் வேறு எந்தெந்த சூழல்களில் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?

* வேலை செய்யும் போது களைப்புத் தெரியாமல் இருக்க தொழிற்பாடல் பாடுவர்.

* குழந்தை உறங்குவதற்கு பாடும் பாடல் தாலாட்டுப் பாடல்.

* குழந்தைகள் விளையாடும் பொதுபாடும் பாடல் விளையாட்டுப் பாடல்.

* சென்னை முதலான பெரு நகரங்களில் மக்கள் பாடும் பாடல் கானப்பாடல்.

### கவிதைப் பேழை: 2. கோணக் காத்துப்பாட்டு

**I. சிறுவினாக்கள்:**

1. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

* வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் வீணாயின.

* தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன.

* அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.

2. கோணக் காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யவை?

* அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.

* திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாக பிரிந்து சரிந்தன.

**II. சிந்தனை வினா:**

1. இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

* பேரிடர்க் கால விழிப்புணர்வுப் பயிற்சி அளித்தல்.

* பேரிடரைத் தவிர்க்க இயற்கை வளங்களைச் சேகரித்தல்.

* தகவல் தொடர்புகளை மேம்படுத்தி வைத்தல்.

* பாதுகாப்பு அமைப்புகளை ஏற்பாடு செய்தல்

* குடிநீர், எரிபொருள், உணவு, உயிர் காக்கும் மருந்துகள், ஆடைகள், முதலுதவிப் பொருட்கள், முதலியவற்றை பேரிடர் காலங்களில் சேகரித்து வைத்தல்.

இது போன்ற முன்னெச்சரிக்கைகளை உடனடியாக பின்பற்றுவதன் மூலம் இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கலாம்.

## உரைநடை உலகம்: நிலம் பொது

### I. சிறுவினாக்கள்:

1. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

* இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள். இவர்கள் தாம் எமது தாகத்தை தீர்க்கிறார்கள்.

* இங்குள்ள ஓடைகளிலும், ஆறுகளிலும், ஓடும் வனப்பு மிகு நீரானது வெறும் தண்ணீரன்று. எமது மூதாதையரின் குருதியாகும். இந்நிலம் புனிதமானது என்று சியாட்டல் கூறுகிறார்.

2. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

* நாங்கள் பூமியைத் தாயாகவும், வானத்தைத் தந்தையாகவும் கருதக் கூடியவர்கள் எங்கள் கால்களைத் தாங்கி நிற்கும் இந்த நிலமானது எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனதாகும்.

* இந்நிலமே எங்கள் தாயாகும்.

* இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள்.

* மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோரர்கள்.

* மலைமுகடுகள், பசும்புல் வெளிகள், பனித்துளிகள் அனைத்தும் இங்குள்ள மனிதர்கள் எல்லாரும் ஒரே குடும்பம் என்று சியாட்டல் கூறுகிறார்.

### II. நெடுவினா:

1. தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்து சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**ஒரே குடும்பம் சார்ந்தவை:**

பூமியானது எனக்கு தாயாகும் நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள். இங்குள்ள  நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள் மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள், மனிதர்கள் எல்லாரும் ஒரே குடும்பம்.

நாங்கள் பூமியைத் தாயாகவும், வானத்தைத் தந்தையாகவும் கருதக் கூடியவர்கள் உங்களுடைய நகரங்களின் காட்சிகளெல்லாம் எமது செவ்விந்தியர்களின் கண்களை உறுத்துகின்றன.

**நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு:**

* நீங்கள் வாழும் எந்த ஓர் இடத்திலும் அசைந்தாடும் இலைகளின் ஓசைகளையோ பூச்சி இனங்களின் ரீங்காரங்களையோ கேட்க முடிவதில்லை. மாறாக சடசடவொலிகள் காதைப் பிளக்கின்றன. மகிழ்வூட்டும் இராக்கூவற் பறவைகளின் ஒலிகளையோ, குளத்தைச் சுற்றி கேட்கும் தவளைகளின் கூச்சல்களையோ கேட்காத வாழ்வு என்ன வாழ்வு.

* செவ்விந்தியர்கள் யாவரும் அமைதியான குளத்தின் முகத்தை முகந்து வரும் தென்றலின் இன்னோசையையும், நடுப்பகலில் பெய்யும் மழையால் எழும் மண்வாசனையையும், தேவதாரு மரத்திலிருந்து பறக்கும் இலைகளின் மணத்தையும் நுகர்வதை விரும்புபவர்கள்.

* எருமைகள் கொல்லப்படுவதையும், எங்குப் பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதையும் தொன்மையான மலைகளை மறைநத்து தொலைபேசி கம்பிகள் பெருகி வருவதையும் எங்களால் ஏற்றுக்கொள்ளமுடிவில்லை.

* இப்பூமியின் மீது எது வந்து விழுந்தாலும் அவையெல்லாம் பூமித்தாயின் மீது வந்து விழுவனவேயாகும். எனவே நிலத்தை நேசியுங்கள். நிலத்தைப் போற்றிக் காப்பாற்றுங்கள் என்று செவ்விந்தியர்களின் தாய்மண் பற்று பற்றி சியாட்டல் கூறுகின்றார்.

### III. சிந்தனை வினா:

1. நில வளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?

* செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுததுவதால் மண்ணின் தரம் குறைகிறது.

* குப்பைகள், நெகிழிகள் போன்றவற்றை மண்ணில் மட்க விடாமல் இருந்தால் நில வளத்தைக் காக்கலாம்.

* தொழிற்சாலைகள் கழிவுகள், வேதியியல் கழிவுகள் வேதிக்கழிவுகள் நிலத்தில் சேரும் போது நிலவளம் குறைகிறது.

* மண் அரிப்பைத் தடுப்பதன் மூலம் நிலவளத்தினைப் பாதுகாக்கலாம்.

* சுரங்கங்கள் அமைப்பதால், பூமிக்கு அடியில் நில இடைவெளி ஏற்பட்டு நிலவளம் குறைகிறது.

* மரங்கள் அதிகமாக வளர்ப்பதன்மூலம் மண் அரிப்பு தடுக்கப்பட்டு நிலவளம் பாதுகாக்கப்படுகிறது.

* மண்ணில் உள்ள கனிம வளங்களை சுரண்டுவதை தடுக்க வேண்டும்.

* மாசு கட்டுப்பாட்டின் மூலம் நிலவளத்தைப் பாதுகாக்கலாம்.

## விரிவானம்: வெட்டுக்கிளியும் சருகுமானும்

**முன்னுரை:**

பரப்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்கின்றனர். அவர்கள் தங்கள் முன்னோர்கள் கூறிய கதைகளை தம் வருங்கால தலைமுறையினருக்குகதையாக கூறியது தான் இந்த கதை. இதில் பச்சை வெட்டுக்கிளி, கூரன் என்ற சருகுமான், பித்தக் கண்ணு என்னும் சிறுத்தை ஆகியவை கதை மாந்தர்கள்.

**வெட்டுக்கிளியும் கூரானும்:**

வாயாடி வெட்டுக்கிளி குறிஞ்சிப் புதரில் வாழ்ந்து வந்தது. கூச்சப்படும் சுபாவம் உடையது. கூரன் அங்கு இளைப்பாற வந்தது. கூரான் வெட்டுக் கிளியிடம்; பித்தக் கண்ணு உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால். வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே. அது என்னைப் பார்த்து விட்டால் பிடித்து ஒரே வாயில் விழுங்கி விடும் என்றது. உடனே வெட்டுக் கிளியும் உறுதிமொழி அளித்தது.

**வெட்டுக் கிளியும் சிறுத்தையும்:**

மோப்பம் பிடித்துக் கொண்டே நடந்து வந்த பித்தக் கண்ணு வெட்டுக் கிளியைப் பார்த்து உறுமியது. "கூரன் இங்கு வந்தாளா? என வினவியது. வெட்டுக் கிளிக்கு சிறுத்தையை அருகில் பார்த்த மகிழ்ச்சி தலைக்கு ஏறியது, பின் கூரனுக்கு அளித்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. ஆனால் பரவசத்தை அடக்க இயலாமல் தன்னை அறியாமல் கூரன் இருக்கும் புதர் அருகில் சென்றது.

சிறுத்தைக்கு புரியத்தொடங்கியது. எனவே புதர் அருகே மோப்பம் பிடித்தது. புனுகுப்பூனை இருந்த இடம் எனவே அதன் துர்நாற்றமே மேலோங்கி இருந்தது. ஆனால் எதுவும் தட்டுப்படாததால் உறுமிக் கொண்டே அந்த இடத்தை விட்டு கிளம்பி வேறு பக்கம் சென்றது.

**கூரன் கூறிய அறிவுரை:**

கூரன் வெட்டுக்கிளியைப் பார்த்து "நான் இன்று செத்துப் பிழைத்திருக்கிறேன். இனி இப்படி செய்தால் திரும்பி வந்து உன்னை என் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன் என்றது. இதனால் தான் இன்றும் கூட எந்த குறிப்பிட்ட திசையை நோக்கியும் குதிப்பதில்லை.

**முடிவுரை:**

இக்கதை நமக்கு வழங்கும் கருத்து "ஒற்றுமையே பலம்" ஆகும்.

## கற்கண்டு - வினைமுற்று

**I. குறுவினாக்கள்:**

1. வினைமுற்று என்றால் என்ன?

ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல் வினைமுற்று எனப்படும்.

2. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் தெரிநிலை வினைமுற்று காட்டும்.

3. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

க, இய, இயர், அல் ஆகியவை வியங்கோள் வினைமுற்று விகுதிகள் ஆகும்.

**II. சிறுவினா:**

1. ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| 1. முன்னிலையில் வரும். | 1. இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். |
| 2. ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | 2. ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. |
| 3. கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | 3. வாழ்தல், வைதல், விதித்தல் வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். |
| 4. விகுதி பெற்றும் பெறாமலும் வரும் | 4. விகுதி பெற்றே வரும் |

## வாழ்வியல் - திருக்குறள்

**I. குறுவினாக்கள்:**

1. சான்றோர்க்கு அழகாவது எது?

சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாக காட்டும். அதுபோல் நடுவுநிலைமையுடன் சரியாக செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

2. பழியின்றி வாழும் வழியாக திருக்குறள் கூறுவது யாது?

பழவருமுன்னே சிந்தித்து தம்மைக்காத்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கை நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்து விடும்.

3. புலித் தோல் போர்த்திய பசு என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம் புலியின் தோலை போர்த்தியப் பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

4. மக்களின் பண்புகளை எவற்றைக் கொண்டு நாம் அறியலாம்?

நேராக இருந்தாலும் அம்பு கொடியது. வளைந்து இருந்தாலும் யாழின் இசை இனிமையைத் தருகிறது. அதுபோல் மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தில் அல்லாமல் செயலால் அறியலாம்.

## II. சிறுவினா:

1. இடனறிதல் பற்றி வள்ளுவர்கூறுவன யாவை?

* பொருத்தமான இடத்தை அறியாமல் எந்தச் செயலையும் தொடங்கவும் கூடாது; இகழவும் கூடாது.
* வலிமையான சக்கரங்களைக் கொண்ட பெரிய நேர் கடலில் ஒட இயலாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓட இயலாது. அவரவர் தமக்குரிய இடங்களிலேயே சிறப்பாகச் செயல்படமுடியும் என வள்ளுவர் கூறியுள்ளார்.

# இயல் - 3

| | | |
|---|---|---|
| கவிதைப்பேழை | : | 1. நோயும் மருந்தும்<br>2. வருமுன் காப்போம் |
| உரைநடை உலகம் | : | தமிழர் மருத்துவம் |
| விரிவானம் | : | தலைக்குள் ஓர் உலகம் |
| கற்கண்டு | : | எச்சம் |

## கவிதைப் பேழை: 1. நோயும் மருந்தும்

## I. சிறுவினா:

1. நோயின் வகைகள் பற்றியும், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றியும் நீலகேசி கூறுவன யாவை?

* மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் தரக்கூடியவை நோய்கள்.
* சில நோய்கள் மருந்தினால் நீங்கும் தன்மை உடையன.
* சில நோய்கள் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள்ளே இருந்து துன்பம் தருவன ஆகும்.
* நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகிய மூன்று மருந்துகளும் உண்பவர்களின் பிறவித் துன்பத்தை நீக்கி இன்பத்தை அளிக்கிறது என நீலகேசி கூறுகிறது.

## II. சிந்தனை வினா:

1. துன்பமின்றி வாழ நாம் கைக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் யாவை?

* நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும்.
* எளிமையான வாழ்க்கை முறையை மேற்கொள்ளல்
* மற்றவர்களுக்கு முன் உதாராணமாக இருத்தல்.
* நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல்.
* விடாமுயற்சியுடன் செயல்படுதல்.

## கவிதைப் பேழை: 2. வருமுன் காப்போம்

## I. சிறுவினா:

1. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

* உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். உடலில் உறுதி இல்லாதவர்க்கு வாழும் இடமும், செல்வமும் இனிய வாழ்வு தராது.
* நாள்தோறும் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம்.
* காலையும், மாலையும் நடைப்பயிற்சி நடந்து, நல்ல தூய்மையானக் காற்றை சுவாசித்தல் உடல் நடத்துடன் வாழலாம்.
* கூழைக் குடித்தாலும் குளித்துப் பிறகே குடித்தல் வேண்டும்.
* வறுமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும்.
* அளவான உணவும், தூய்மையானக் காற்றும், நல்ல குடிநீரும், நன்கு பசித்தப்பிறகு உண்பதும் நம்மை நோய் அணுகாமல் காப்பாற்றி, நூறாண்டு வாழ வைக்கும் என உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறுகின்றார்.

## II. சிந்தனை வினா:

1. நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?

* வீட்டைச் சுற்றி கழிவு நீர் மற்றும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
* குடிநீரை மூடிவைக்க வேண்டும்.
* தூய்மையான துணிகளை அணிய வேண்டும்.

* தண்ணீர் அதிகம் அருந்த வேண்டும்.

* துரிதக உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

* குடிநீரை நன்கு காய்ச்சி ஆறிய பின்னர் அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

## உரைநடை உலகம்: தமிழர் மருத்துவம்

### I. சிறுவினாக்கள்:

1. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

* மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்தது தான் நோய்கள் பெருக மிக முக்கியமான முதன்மைக் காரணம் ஆகும்.

* 'உணவே மருந்து' என்ற நிலைமாறி 'மருந்தே உணவு' என்ற நிலை ஏற்பட்டு விட்டது,

* தான் வாழும் சுற்றுச்சூழல் மாசு நிறைந்து காணப்படுவதாலும், தூய்மையானக் காற்றை சுவாசிக்க இயலாமையாலும் நோய்கள் பெருகிவிட்டன.

* தன் உணவுக்காக எதைப் பற்றியும் கவலைக் கொள்ளாமல் நிலத்தை உரங்களாலும், பூச்சிக் கொல்லிகளாலும் நச்சுப் படுத்துவதும், மன அழுத்தம் ஏற்படுவதும் மிக முக்கியமான காரணங்கள் ஆகும்.

* நம்முடைய வாழ்வியலைச் செம்மைப்படுத்த அறிவியல் அறிவை வளர்ந்தோம். ஆனால் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும் என்கிற நுண்ணிறிவைத் தொலைத்துவிட்டோம் இதுவே இன்றைக்குப் பல நோய்கள் பெருகக் காரணம் ஆகும்.

2. பள்ளிக்குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

* நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதைவிட வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

* சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் நம்மை நலமாக வாழ வைக்கும்.

* விலை உயர்ந்த உணவுதான் சரியான உணவு என்று எண்ணக் கூடாது.

* எளிமையாகக் கிடைக்கக்கூடிய காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

* கணினித் திரையிலும், கைப்பேசியிலும் விளையாடுவதைத் தவிர்த்து நாள்தோறும் ஓடியாடி விளையாட வேண்டும்.

* உரிய நேரத்தில் உறங்கச் சென்று, அதிகாலையில் விழித்தெழுந்தால் எந்த நோயும் அண்டாது என பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் அறிவுரைக் கூறியுள்ளார்.

### II. நெடுவினா:

1. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**தமழிரின் மருத்துவம்:**

அருந்தும் உணவே அருமருந்தென அறிந்தவர்கள் நம் தமிழ்மக்கள். தமிழ்மக்கள் உடற்கூறுகள் பற்றிய அறிவிலும், மருத்துவத்திலும் சிறந்து விளங்கினர். உலகில் பல்வேறு மருத்துவ முறைகள் இருந்தாலும் தமக்கென சில மருத்துவ முறைகளைப் பின்பற்றி வந்தனர்.

**மனிதனுக்கும், மருத்துவத்திற்குமான தொடர்பு:**

தொடக்கக் காலத்தில் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான். நோய் ஏற்பட்டபோது இயற்கையாக வளர்ந்த தாவரங்களையும், அருகில் கிடைத்தப் பொருள்களையும் கொண்டு நோயைத் தீர்க்க முயற்சி செய்தான். தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி முதலியவற்றையும் மருந்தாக பயன்படுத்தினான். இவ்வாறுதான் மனிதனுக்கும், மருத்துவத்திற்குமான தொடர்பு தொடங்கியது.

**தமிழர் மருத்துவத்தில் சிறந்து விளங்குதல்:**

பழந்தமிழர்கள் மருத்துவத்தை அறிந்தது மட்டுமின்றி மருத்துவத்திலும் சிறந்து விளங்கினர் என்பதனைப் பற்றிய குறிப்புகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. மூலிகை மருத்துவம், அறுவை மருத்துவம், மருந்தில்லா மருத்துவம் போன்றவற்றையும், உடலை வளப்படுத்தி உள்ளத்தைச் சீராக்கும் யோகம் முதலிய கலைகளையும் அறிந்திருந்தார்கள்.

**தமிழர் மருத்துவத்தின் சிறப்பு:**

ஒரு மருந்தை எடுத்துக் கொண்டால் அதற்கு விளைவும் இருக்கும். பக்கவிளைவும் இருக்கும். ஆனால் தமிழர் மருத்துவத்தில் பக்கவிளைவுகள் இல்லை. அதற்குத் காரணம் மருந்து என்பதே உணவின் நீட்சியாக இருக்கிறது.

சூழலுக்கு இசைந்த மருத்துவம் இது. இந்த மருத்துவத்தின் பயன்பாடோ, மூலக்கூறுகளோ, மருந்துகளோ சுற்றுச் சூழலைச் சிதைக்காது 'நோய்நாடி நோய் முதல்நாடி' என்ற திருக்குறளின் படி நோயை மட்டுமின்றி அதன் காரணிகளையும் கண்டறிந்து ஒருவரை நோயில்லாத மனிதனாக மாற்றுகிறது.

### III. சிந்தனை வினா:

1. நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

* பசி இல்லாதபோது சாப்பிடக் கூடாது.
* செயற்கைக் குளிர்பானங்களைத் தவிர்க்க வேண்டும்.
* உணவில் ஆறு சுவைகள் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். ஆறு சுவையையும் திகட்டும் வரை உண்ண வேண்டும்.
* நன்கு மென்று, சுவையை ருசித்தப் பின்னரே விழுங்க வேண்டும்.
* சாப்பிடுவதற்கு அரைமணிநேரம் முன்பும், பின்பும் நீர் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.
* சரியான நேரத்தில் உறங்க வேண்டும்.
* இரவில் எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவையே உண்டால் தூக்கமின்மை தொந்தரவு ஏற்படாது.

## விரிவானம்: தலைக்குள் ஓர் உலகம்

### முன்னுரை:

உலகத்திலேயே மிக மிக வியப்பானது மனித மூளை. மூளை முதுகுத் தண்டில் இருந்து மூளைக்கிறது. அவை உள்மூளை, நடுமூளை, பின்மூளை முன் மூளையின் மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ளன. சிறுமூளைதான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.

### மூளையின் உணவு:

மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மில்லி குருதி தேவைப்படுகிறது. மூளை உடம்பின் எடையில் ஐம்பதில் ஒரு பங்கே இருந்தாலும் அது குருதி உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை தனதாக்கிக் கொள்கிறது. தன் ஆற்றலைச் சேகரிக்க இடம் இல்லை. எனவே குருதியோட்டம் எப்போதும் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

### மூளையின் வலதும் இடதும்:

மூளையின் வலப்பக்கச் செய்திகள், அதன் இடப்பக்கப் பகுதிக்கும் இடப்பக்கச் செய்திகள் அதன் வலப்பக்கப் பகுதிக்கும் செல்கின்றன. இடது பாதிதான் பேச, எழுத, கணக்கிட மற்றும் நம் மொழி அறிவு கூட இடது பகுதியே. கவிதை எழுதுவது, படம் வரைவது நடனம் ஆடுவது, நடிப்பது போன்ற கலை தொடர்பானவை எல்லாம் வலது பாதியில் தான். இடதும் வலதும் சரியா அளவில் கலந்து இருப்பவர்களும் உண்டு.

### மூளையும் நினைவாற்றலும்:

வாழ்நாள் முழுவதும் பல செய்திகள் நம் நினைவில் இருக்கின்றன. கண், காது, தொண்டை அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில செய்திகள் குறுகிய கால நினைவுக்கு அனுப்பப்படுகின்றன. புதிய செய்திகள் வரும்போது பழைய செய்திகள் நீக்கப்படும். மீண்டும் மீண்டும் நினைக்கப்படும் செய்திகள் தேர்ச்சி பெற்று நம் மூளையின் நிலையான நினைவுக்கு அனுப்பப்படுகின்றன.

### முடிவுரை:

கற்பது நம் மூளையில் மாறுதல்களை ஏற்படுத்துகிறது என்பது பரிசோதனை மூலம் கண்டறிந்த உண்மை. கற்க, கற்க, நம் நியூரான்களின் இணைப்புச் சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. மூளையின் எடை கூடும், அதில் உள்ள புரோட்டின் அளவு அதிகரிக்கிறது.

## கற்கண்டு - எச்சம்

### I. சிறுவினாக்கள்:

1. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும். எச்சம் இரண்டு வகைப்படும். அவை: 1. பெயரெச்சம் 2. வினையெச்சம்.

2. 'அழகியமரம்' -எச்ச வகையை விளக்குக.

'அழகிய' என்னும் சொல் 'மரம்' என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும்.

3. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

சான்று: வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.

இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப் பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

4. வினையெச்சத்தின் வகைகளை எழுதுக.

வினையெச்சம் இரண்டு வகைப்படும். அவை: 1. தெரிநிலை வினையெச்சம் 2. குறிப்பு வினையெச்சம்.

5. தெரிநிலை வினையெச்சம் -சான்று தந்து விளக்குக.

சான்று: எழுதி வந்தான்.

இத்தொடரில் உள்ள 'எழுதி' என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும், காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

6. குறிப்பு வினையெச்சம் - சான்று தந்து விளக்குக.

சானறு: மெல்ல வந்தான்.

இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்தி வரும் வினையெச்சம் குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

## இயல் - 4

| | | |
|---|---|---|
| கவிதைப்பேழை | : | 1. கல்வி அழகே அழகு<br>2. புத்தியைத் தீட்டு |
| உரைநடை உலகம் | : | பல்துறைக் கல்வி |
| வரிவானம் | : | ஆன்ற குடிப்பிறத்தல் |
| கற்கண்டு | : | வேற்றுமை |

### கவிதைப் பேழை: 1. கல்வி அழகே அழகு

**I. சிறுவினா:**

1. நீதி நெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை. அது போலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் தங்கம், வெள்ளி போன்ற விலைமதிப்பு மிக்க உலோகங்களால் செய்யப்பட்ட பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை என நீதி நெறி விளக்கம் கூறுகிறது.

**II. சிந்தனை வினா:**

1. கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

* கல்வி கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் பிறரால் மதிக்கப்படுகின்றான். இதற்குக் காரணம் அவன் கற்ற கல்வியே ஆகும்.

* கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்காக உதவும் கருவியாகும்.

* கல்வி கற்றவன் ஒழுக்கம், பண்பு, நேர்மை, நீதி ஆகியவற்றை வாழ்வில் கடைபிடித்து சிறப்புற்று விளங்குவான்.

* கல்வி கற்றவர் அழிந்து விடலாம். ஆனால் அவர் கற்பித்த கல்வி இந்த உலகம் அழியும் வரை இருக்கும்.

* நல்லன எவை? தீயவை எவை?எனப் பகுத்துணரும் பணபைப் பெறுகின்றான்.

### கவிதைப் பேழை: 2. புத்தியைத் தீட்டு

**I. சிறுவினா:**

1. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

* அறிவும், உழைப்பும் ஒரு மனிதனை வாழ்வில் உயரச் செய்யும்.

* வன்முறையால் பிறரை வெல்வது சரியான செயலன்று.

* அறிவினாலும், அன்பினாலும் பிறரை வெல்லும் வெற்றியே நமக்குப் பெருமை தரும்.

* மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றதாகும்.

* பிறரை மன்னிக்க மறந்தவனின் வாழ்வு அழிந்துவிடும்.

* இங்கு வாழும் சிலகாலத்தில் பெருமை கொண்டு வாழ்வதனால் பயன் ஒன்றும் இல்லை. இதனை புத்தியைத் தீட்டி எண்ணிப் பார்த்தால் தெளிவு உண்டாகும் எனக் கவிஞர் கூறியுள்ளார்.

**II. சிந்தனை வினா:**

1. உங்கள் மீது பிறர் வெறுப்புக் காட்டினால் அவர்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?

* நம் மீது பிறர் வெறுப்புக் காட்டும் போது தகுந்த முறையில் பேசி வெறுப்பினை நீக்க முயற்சி செய்ய வேண்டும்.

* நாம் தவறு செய்து நம் மீது பிறர் வெறுப்புக் காட்டும் போது பாதிக்கப்பட்டவரிடம் மன்னிப்பு கேட்கத் தயங்கக்கூடாது.

* மன்னிப்பு கிடைத்ததோ இல்லையோ? ஆனால் மன அமைதி கிடைக்கும்.

### உரைநடை உலகம்: பல்துறைக் கல்வி

**I. சிறுவினாக்கள்:**

1. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.

* தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய கலைகள் இல்லை. சிறப்பான அறிவியல் கலைகள் இல்லை என்று கூறுகின்றனர்.

* முதலில் தாம் கண்ட புதுமைகளைத் தம் தாய் மொழியில் வரைந்து விடுகின்றனர். பின்னர் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகின்றன. இம் மொழி பெயர்ப்பு முறையைக் கொண்டு தமிழர் தாய் மொழியை வளர்த்தல் வேண்டும்.

* தாய்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கம் தேட வேண்டும்.

* கலைகள் யாவும் தாய் மொழியின் வழி மாணவர்களுக்கு அறிவுறுத்தப் பெறுங்காலமே தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும் என தமிழ் வழிக்கல்வி பற்றித் திரு. வி. க. கூறியுள்ளார்.

2. 'அறிவியல் கல்வி' பற்றிக் திரு. வி. க. கூறுவன யாவை?

* உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'அறிவியல்' என்னும் அறிவுக்கலை ஆகும்.

* உடற்கூறு, உடலோம்புமுறை, பூத்பௌதிகம், மின்சாரம், நம்மைச் சுற்றியுள்ள செடி, கொடி, பறவை, விலங்குகள் பற்றியப் பொது அறிவினைப் பெற வேண்டும்.

* புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழு கொம்பு போன்றது.

* நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது.

*இக்கால உலகத்தோடு உறவு கொள்ளவும் அறிவியல் தேவை.

எனவே அறிவியல் என்னும் 'அறிவுக்கலை' இளைஞர் உலகில் பரவவேண்டும் என அறிவியல் கல்வி பற்றி திரு. வி. க. கூறுகின்றார்.

## II. நெடுவினா:

1. காப்பியக் கல்வி இயற்கைக் கல்வி குறித்துத் திரு. வி. க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

### காப்பியக் கல்வி:

* வாழ்விற்குரிய இன்பத் துறைகளுள் காவிய இனபமும் ஒன்று. இதனைத் தலையாயது என்று கூறலாம்.

* நாம் தமிழர்கள், நாம் பாட்டின் இன்பத்தை நுகர வேண்டுமானால் நாம் தமிழ் இலக்கியங்களுக்கிடையே செல்லுதல் வேண்டும்.

* தமிழில் இலக்கியங்கள் இருக்கின்றன. அவை இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள்.

* இத்தமிழ் கருவூலங்களை பழக்கப்படிக்க உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது.

* தமிழ்ச் காவியங்களைப் படிக்கும் போது தமிழ் இன்பத்திலும் சிறந்த இன்பம் இவ்வுலகில் இல்லை என அறிந்து கொள்ளலாம்.

### இயற்கைக் கல்வி:

* ஏடுகளைப பயில்வதுடன் நில்லாது ஓய்வு நேரங்களில் இயற்கை நிலையங்களில் புகுந்து, இயற்கையுடன் இணைந்து கற்பதே இயற்கைக் கல்வி ஆகும்.

* காடு செறிந்த ஒருமலை மீது ஏறி ஒரு மரத்தடியில் நின்று, மண்ணையும் விண்ணையும் நோக்க வேண்டும்.

* அருவி முழவும், குயில் குரலும், வண்டிசையும், மயில் அகவலும், மலர் மனமும், தேனினிமையும், தென்றல் வீசுவதும் புலன்களுக்கு விருந்தாகும்.

* அந்தியில் ஞாயிறு அமருங் கோலத்தையும், பறவைகள் பறந்து செல்வதையும், காணவேண்டும். கேட்டு மகிழ வேண்டும். இயற்கைக் கழகத்தில் பயின்று பயின்று தான் சங்கப்புலவர்கள் இளங்கோ, திருத்தக்கதேவர், ஆண்டாள், கம்பர், முதலியோர் இயற்கைக் கோலத்தை எழுத்தோவியத்தில் இறக்கி இருக்கின்றனர் என்பதனை உணர்ந்து கொள்ளலாம்.

## III. சிந்தனை வினா:

1. திரு. வி. க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்? OWN

### விரிவானம் : ஆன்ற குடிப்பிறத்தல்

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

### முன்னுரை:

ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் உயர்த்துவதில் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. புதியச் செய்திகளைக் கற்பது மட்டும் கல்வியன்று மனிதனின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் நற்பண்புகளை

வெளிக் கொண்டு வருவதும் அவனது வாழ்வில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதும் கல்வியின் நோக்கங்களாகும். ஆசிரியர் விதைத்த விதை எவ்வாறு பயன்தந்தது என்பதைப் பற்றி இக்கதையில் காண்போம்.

**தலைமையாசியரின் வீடு:**

சிற்றூரில் ஓர் எளிய குடிசைவீட்டில் வாழ்ந்து வந்தார். அங்குள்ள பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றியவர். ஒருநாள் காலை பள்ளிக்கு புறப்படும் முன்பு தனது எட்டுமுழ வேட்டியைத் துவைத்து கொடிக்கயிற்றில் காயப் போட்டுவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டுச் சென்றார். அன்று மாலை அவரது வேட்டியைக் காணவில்லை. ஊர்மக்கள் சிலர் சிகாமணிதான் எடுத்திருப்பான் என்றுக் கூறினர்.

**தலைமையாசிரியர் பள்ளிக்கூடம் செல்லுதல்:**

தலைமையாசிரியர் பள்ளிக்குச் சென்றார். பண்புடைமை என்னும அதிகாரத்தில் இருந்து இரண்டு குறள்களைக் கற்றுக் கொடுத்தார். சிகாமணியின் மகன் தலைமையாசிரியரிடம் தான் நான்காம் வகுப்பு படிக்கிறான். ஆசிரியர் பாடம் நடத்தும்போது, சிகாமணியின் மகன் சகாதேவன் கூர்ந்து கவனிக்கின்றான். "அப்பன் திருடனாக இருக்கலாம், மகன் நல்லவனாக இருப்பான் என்று உலகோர் பேசுவதைக் கேட்டிருப்பீர்கள். அப்பன், பாட்டன், திருடனாக இருந்தாலும் உன்னிலிருந்து திருடாதவன் என்னும் ஒரு புதிய குடி உதிக்கட்டும். ஒழுக்கம் இல்லாத பரம்பரையில் நீ வந்திருந்தாலும் ஒழுக்கத்தின் உறைவிடமாக நீ இருக்க வேண்டும். உன் பழைய குடியில் உள்ள இழிவுகள் எல்லாம் நீங்கி ஒரு புதுத்தலைமுறை உன்னிலிருந்து தொடங்குவதும் பண்புடைமை என்று சொல்லப்படும் என திருக்குறளுக்குப் பொருள் விளக்கமளித்தார்.

**சாகதேவனின் நல்ல குணம்:**

தலைமையாசிரியரின் வேட்டியை தனது அப்பாதான் எடுத்துக் கொண்டு வந்து வீட்டில் வைத்திருக்கிறார் என்று பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வந்ததும் தன் நண்பன் கிருஷ்ணமூர்த்தியிடம் கொடுத்து ஆசிரியரிடம் கொடுக்கச் செய்தான். தலைமையாசிரியர் வீட்டிற்கு வந்த கிருஷ்ணமூர்த்தி காலையில் நீங்கள் வகுப்பில் நடத்தின பாடத்தைக் கேட்டு, சகாதேவன் உங்களது வேட்டியை உங்களிடம் கொடுக்கச் சொன்னான் எனக் கூறினான்.

**தலைமையாசிரியரின் மகிழ்ச்சி:**

தலைமையாசிரியர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இந்த மகிழ்ச்சி வேட்டி கிடைத்ததற்கு மட்டுமல்ல. உண்மையில் நாற்றொன்று ஊன்றி நடப்பட்டதோர் உற்சாகம் சொல் எத்தனை சக்தி வாய்ந்தது என்பதை உணர்ந்து பெரு மகிழ்ச்சிக் கொண்டார்.

**முடிவுரை:**

இக்கதையின் மூலமாக ஒரு ஆசிரியர் கூறும் அறிவுரை மூலம் நல்ல மாணவர்களைப் பெற முடியும். ஆசிரியர்க்கும், மாணவனுக்கும் உரியத் தொடர்பு சக்தி வாய்ந்தது என்பதனை உணர்ந்து கொள்ளலாம்.

## கற்கண்டு - வேற்றுமை

**I. குறுவினாக்கள்:**

1. வேற்றுமை என்பது யாது?

பெயர்ச்சொல்லின் பொருளைச் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும்.

2. இரண்டாம் வேற்றுமை எவ்வெப்பொருளில் வரும்?

இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வரும்.

3. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

நான்காம் வேற்றுமை கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை என எட்டுப் பொருளில் வரும்.

**I. சிறுவினாக்கள்:**

1. எழுவாய் வேற்றுமையை விளக்குக.

எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும். முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை எனவும் அழைப்பர். சான்று: பாவை வந்தாள்.

2. உடன் நிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?

ஒரு எழுவாயின் செயலுடன் பிறிதொன்றனது செயலும் நடைபெறுவது உடன் நிகழ்ச்சிப் பொருள் எனப்படும். ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

சான்று: தாயொடு குழந்தை சென்றது.

## கடிதம் - உறவு முறைக் கடிதம்

சுற்றுலா செல்ல அனுமதி வேண்டி தந்தைக்கு கடிதம் எழுதுக:

ராஜா வீதி

நாள்:

அன்புள்ள தந்தைக்கு,

நான் இங்கு நலம், அதுபோல் அங்குள்ள அனைவரின் நலம் அறிய ஆவல். நான் பள்ளியில் நடைபெற்ற ஆண்டுவிழா பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு முதல்பரிசு பெற்றுள்ளேன். வகுப்பிலும் முதல் மாணவியாக தேர்வாகியுள்ளேன்.

எங்கள் பள்ளியில் கல்விச் சுற்றுலாவாக மாமல்லபுரம் செல்ல உள்ளனர். சுற்றுலாவில் நானும் கலந்து கொண்டு வரலாற்றுத் தகவல்களை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையால் தங்களின் அனுமதி வேண்டி இக்கடிதத்தை எழுதுகிறேன். தங்கள் அனுமதியுடன் சுற்றுலா சென்றுவர ரூ.1000 அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

இப்படிக்கு

உங்கள் அன்புமகன்/மகள்

உறைமேல் முகவரி,

ஆர். முருகன்

காந்திநகர்,

மதுரை.

## புகார் கடிதம்

உன் ஊரில் மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரியத் தலைவருக்கு விண்ணப்பம் வரைக.

அனுப்புநர்:

ஊர்ப் பொதுமக்கள்,

மீனாட்சிபுரம்,

சென்னை - 99

பெறுநர்:

நகராட்சி ஆணையர் அவர்கள்,

நகராட்சி அலுவலகம்,

சென்னை - 99

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: மின்விளக்கு வசதி வேண்டுதல் சார்பாக.

நாங்கள் வசிக்கும் இடம் மீனாட்சிபுரம். இங்கு ஏறத்தாழ இருநூறு வீடுகள் உள்ளன. 5000 மக்கள் வசிக்கின்றனர். எங்கள் பகுதியில் தெரு விளக்குகள் சரிவர எரிவது இல்லை. இரவு நேரங்களில் வெளியூர் சென்று வரும் முதியோர்கள், பெரியவர்கள், குழந்தைகள், தெருக்களில் நடந்து வர தவிக்கின்றனர். எனவே எரியாத மின்விளக்குகளை மாற்றி எங்கள் பகுதி மக்களின் இடையூறுகளை சரிபடுத்தி தரும்படி இப்பகுதிமக்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி,

இப்படிக்கு

ஊர் மக்கள் சார்பாக,

இடம்: மீனாட்சிபுரம்

நாள்: 22.08.2017

உறைமேல் முகவரி:

நகராட்சி ஆணையர் அவர்கள்,

நகராட்சி அலுவலகம்,

சென்னை - 99

# கட்டுரை

தேசிய ஒருமைப்பாடு பற்றி கட்டுரை எழுதுக:

குறிப்புச் சட்டகம்

1) முன்னுரை

2) தேசிய ஒருமைப்பாட்டுணர்வு

3) ஒருமைப்பாட்டுணர்வின் பயன்

4) ஒருமைப்பாடு வளர வழிகள்

5) முடிவுரை

முன்னுரை:

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பாரதியின் கூற்று வீட்டுக்கு மட்டுமன்று. நாட்டுக்கும் பொருந்துவது நாம் வறுமை, அறியாமை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவும், பகைக்கு அஞ்சாது பாதுகாப்போடு வாழவும், நமக்குத் துணை நிற்பது இந்த ஒருமைப்பாட்டுணர்வே ஆகும். எனவே நம் நாடு நலம் பெறவும், நாம் நல்வாழ்வு வாழவும் ஒருமைப்பாடு மிகவும் அவசியம் ஆகும். இதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

தேசிய ஒருமைப்பாட்டுணர்வு:

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கூறி ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டினார் கணியன் பூங்குன்றனார். பண்டைய மன்னர்களிடையே ஒருமைப்பாடு இல்லாததால் வேட்டைக்காடாக விளங்கியது நம் பாரதம். ஆனால் "நாம் இந்தியர்" என்ற உணர்வுடன் காந்தியின் தலைமையில் ஒருமைப்பாட்டுணர்வு மேலோங்கியது.

ஒருமைப்பாட்டுணர்வின் பயன்:

ஒற்றுமையே நாட்டின் உயர்வுக்கு அடிப்படை. பாரதத்தின் ஒற்றுமைதான் பிற நாட்டினரை சிந்திக்க வைத்தது. குமரி முதல் இமயம் வரை ஒருமையுடன் இருப்பதாலேயே ஒருவருக்கொருவர் உணவு, நீர் போன்ற முக்கியமானப் பொருள்களையும் பகிர்ந்து கொள்ள முடிகிறது.

ஒருமைப்பாடு வளர வழிகள்:

குண்டு சட்டியில் குதிரை ஒட்டுவதை விடுத்து எத்திசைக்கும் சென்று பலதரப்பட்ட மக்களின் வாழ்வைக் காண வேண்டும். சாதி, சமயம், மொழி வேறுபாடற்று எல்லோரிடமும் அன்பு பாராட்ட வேண்டும். ஒருமைப்பாட்டிற்குக் குறுக்கே நிற்கும் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வை களைய முயல வேண்டும். அப்போதுதான் பாரத சமுதாயம் வளரும்.

முடிவுரை:

காக்கைக் குருவி எங்கள் ஜாதி நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்" என்ற ஒருமைப்பாட்டுணர்வு ஏற்பட்டாலே "நான்" என்பது மாறி "நாம்" என்று ஆவோம். இதற்கு சாதி, சமய, மொழி, இனம் ஆகியவற்றைக் கடந்து ஒற்றுமை உணர்வுடன் அனைவரும் வாழ வேண்டும்.